[1984 மார்ச் 27

‘டானிடா’ திட்டத்தை செங்கற்பட்டு மாவட்டத்திற்கு விஸ்தரிக்கும் திட்டம்.

*476—(வினா எண் 21107) திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ‘டானிடா’ திட்டம் விஸ்தரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் ‘டேனிடா’ திட்டம் எங்கெங்கே செயல்படுகிறது? அதற்கு நம்முடைய அரசு எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இந்த டேனிடா திட்டத்தைப் பொறுத்தவரையில் 1-8-1981 லிருந்து 31-7-1986 வரையிலான ஐந்தாண்டுத் திட்டமாக இதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். 14.40 கோடி ரூபாய் இந்த ஐந்தாண்டுகளில் செலவிடப்படும். டென்மார்க் என்ற நாட்டின் உதவி 12.72 கோடி ரூபாய், மீதமுள்ள பணத்தை தமிழக அரசு செலவிடும். சேலம் மாவட்டத்திலும் தென்னாற்காடு மாவட்டத்திலும் இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

ஈரோடு நகரத்தின் சுற்றுவட்டாரத்திலுள்ள சாயப்பட்டறைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீர்.

*477—(வினா எண் 19660) திரு. கு. ரமணி: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஈரோடு நகரத்தில் சுற்று வட்டாரத்தில் சாயப்பட்டறைகள் ஏராளமாக உள்ளதிலிருந்து வெளிவருகிற இரசாயனப் பொருள் கலந்த கழிவுநீர் தேங்கி நின்று நிலத்தடி நீரைக் கெடுத்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் கழிவு நீரை வெளியே அகற்றி சுகாதாரத்தைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?